[18th July 1964

THE HON. SRI R. VENKATARAMAN: A licence has been granted for the establishment of a cotton spinning mill with 12,000 spindles in the private sector at Tiruvellore in the Chingleput district.

கால்நடை மருத்துவ சாலே

*548 கேள்வி.—திரு. வி. ஆர். பெரியண்ணன்: கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1964-ல் சேலம் மாவட்டத்தில் கால்நடை மருத்துவச் சாலேகளைத் துவக்கும் உத்தேசமுண்டா?

(இ) ஆமெனில், அவை எங்கெங்கு திறக்கப்படும்?

கனம் திரு. பூ. கக்கன்: (அ) ஆம்.

(இ) ஒன்பது கால்நடை மருத்துவ மனேகள் கீழ்க்கண்ட இடங்களில் திறக்க உத்தேசங்கள் பரிசீலனையில் உள்ளன:—

(1) உதான்கரை (2) பென்னுகரம்
(3) பாலகோடு (4) கலமங்கலம்
(5) பாப்பிரெட்டிபட்டி (6) தர்மபுரி
(7) இடப்பாடி (8) வென்னுண்டூர்
(9) பள்ளிபாளயம்.

(a) Yes.

(b) Proposals to open Veterinary Dispensaries in the following places in 1964–65 are under consideration.

(1) Uthangarai. (2) Pennagaram.
(3) Palacode. (4) Kalamangalam.
(5) Pappireddipatti. (6) Dharmapuri.
(7) Idappady. (8) Vannandur.
(9) Pallipalayam.

9–30 a.m. திரு. வி. ஆர். பெரியண்ணன்: தலேவர் அவர்களே, சேந்தமங்கலத்தில் ஒரு கால் நடை வைத்தியசாலே வைக்க இந்த ஆண்டிலேயே ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன்: அந்தக் தகவல் என்னிடம் இல்லே தனிக் கேள்வி போட்டால் சொல்லுகிறேன்.

*549 கேள்வி.—திரு. ஆ. கு. சுப்பையா: கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மதுரை, திருவள்ளுவர் நெசவு கூட்டுறவுச் சங்கம் காலனிக்காக நிலம் ஆர்ஜிதம் செய்துதரும்படிக் கேட்டு 1962-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 22-ம் தேதியில் மனு செய்தார்களா?

18th July 1964]

(இ) ஆமென்றால், அந்த மனுமீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) Yes.

(b) As the lands required to be acquired by the Society are fertile wet lands and as no new housing schemes are now being sanctioned by the Government in view of the National Emergency, the request has been turned down.

திரு. மீ. கலியாணசுந்தரம்: *சார், எமர்ஜன்ஸி மட்டும் காரணமா அல்லது அதிக விலை உயர்ந்த நிலம் என்ற காரணத்திற்காக நிராகரிக்கப்பட்டதா ? வேறு நிலம் பற்றி யோசிக்கப்பட்டால் அதை அரசாங்கம் கவனிக்க முன்வருமா ?*

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: அது இரண்டு காரணங்களுக்காக நிராகரிக்கப்பட்டது. சர்க்காருக்குப் பொதுவாக ஒரு கொள்கை இருக்கிறது, நல்ல நஞ்சை நிலத்தை வீடு கட்டும் திட்டத்திற்காக கூடுமான அளவு ஆர்ஜிதம் செய்வதில்லை என்பது. 'கூடுமான அளவு' என்பதை நான் வற்புறுத்துகிறேன். அடுத்தபடியாக, இப்பொழுது பணம் இல்லை. இந்த மூன்றாவது திட்டத்திலே இனிமேல் வீவர்ஸ் ஹௌஸிங்குக்கு கொடுக்க பணம் இல்லாத காரணத்தினால், அதை நிறுத்தி வைத்திருக்கிறோம். 550 கேட்கப்பட்டது, பதிலளிக்கப்பட்டது.

N.C.C. Training

* 550 Q.—SRI K. A. MATHIALAGAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) the number of Colleges in which N.C.C. training is given to male students;

(b) the number of students who underwent training during 1963–64; and

(c) the expenditure incurred in this regard during 1963–64.

THE HON SRI R. VENKATARAMAN : (a) 60;

(b)	Colleges	41,497
	Polytechnics	6,055
	Industrial Training Institutes ...	2,052
	Total ...	49,604

(c) Rupees 36 lakhs (approximately).

திரு. மா. இராசாங்கம்: தேசிய மாணவர் படைப் பயிற்சி பெண்களுக்கும் கொடுப்பதனால், பெண்மையின் மென்மை கெட்டுப் போகும் என்ற உண்மை சர்க்காருக்குத் தெரியுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: அரசாங்கத்திற்குத் தெரியுமா என்பது ஒருபுறம் இருக்க, இந்தக் கருத்து ரொம்பப் பழமையான ஒரு கருத்து, அது நவீன உலகத்திற்கு உகந்த கருத்து அல்ல என்று அங்கத்தினருக்குச் சொல்ல விரும்புகிறேன்.